**திருகோணமலை மாவட்டத்தின் 22 கமநல சேவைகள் செயற்குழுக்கம் - 2022**

---

**1. கணக்காய்வு அபிப்பிராயம்**

**1.1** திருகோணமலை மாவட்டத்தின் 22 கமநல சேவைகள் செயற்குழுக்களின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத் திகதியில் முடிவடைந்த ஆண்டுக்கான நிதிச் செயலாற்றுகைக் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று உள்ளடங்கலாக 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுகள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியல் அமைப்பின் 154(3) பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டம் மற்றும் 2000 ஆம் ஆண்டின் 46 ஆம் இலக்க கமநல அபிவிருத்தி சட்டத்தின் 58(1) ஆம் உறுப்புறையில் உள்ளடக்கப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் மற்றும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காட்டப்பட்டுள்ளன.

**1.2** 2022 ஆம் ஆண்டிற்குரிய திருகோணமலை மாவட்டத்தின் 22 கமநல சேவைகள் செயற்குழுக்களின் கணக்காய்வு அறிக்கைகள் வழங்கப்பட்டுள்ளதுடன் அந்த 22 செயற்கழுக்களுக்கு முனைப்பழியுள்ள அபிப்பிராயத்தை வெளிப்படுத்தியிருந்ததுடன் அதற்கு காரணமான பொருண்மையான தவறுகள் கீழே காட்டப்பட்டுள்ளன.

**1.3.1 கணக்கீட்டு குறைபாடுகள்**

| | **செயற்குழு / செயற்குழுக்கள்** | **கணக்காய்வு அவதானிப்புக்கள்** | **முகாமைத்துவத்தின் கருத்துரை** | **பரிந்துரைகள்** |
|---|---|---|---|---|
| (அ) | கிளிவெட்டி, கிண்ணியா, குறிஞ்சாங்கேணி, சேருவில, தோப்பூர், ஈச்சிலம்பற்று, மூதூர், குச்சவெளி | 1981 இன் ஒக்டோபர் 16 ஆந் திகதிய 107 ஆம் இலக்க கமநல சேவைத் திணைக்களத்தின் சுற்றறிக்கையின் 04 ஆம் பந்தியின் பிரகாரம், மரத் தளபாடம் மற்றும் உபகரணங்களுக்கு 10% வருடாந்த தேய்மானம் கணிப்பிடப்பட வேண்டியிருந்த போதிலும் 08 கமநல கமநல சேவைகள் செயற் குழுக்களினால் வெவ்வேறு முறை மற்றும் குறைந்து செல்லும் வீதத்தினைப் பயன்படுத்தியிருந்தன. இதனால் செலவினம் ரூபா 393,210 ஆல் குறைத்து காண்பிக்கப்பட்டிருந்தது. | அடுத்த நிதிக் கூற்றுக்களில் தளபாடங்கள் மற்றும் உபகரணங்களுக்காக சரியான பெறுமானத் தேய்வு கணக்கிடப் பட்டுள்ளதாக எனஉறுதிப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும். | சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் செயற்பட வேண்டும் |
| (ஆ) | நிலாவெளி கிண்ணியா, குறிஞ்சாங்கேணி, சேருவில, | நலனாலிகளுக்கு சலுகை விலை அடிப்படை இரண்டு சக்கர உழவு இயந்திரத்தை வழங்கியதன் விளைவாக ஏற்பட்ட ரூபா 1,159,150 வரவு மீதி நிதிக் கூற்றுக்கள் மூலம் வெளிப்படுத்தட்டிருக்கவில்லை. | இதனை எதிர்காலத்தில் நிதிக் கூற்றுகளில் வெளிப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும். | நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (இ) | சேருவில ஈச்சிலம்பற்று நிலாவெலி | 2020 மற்றும் 2021 ஆம் ஆண்டுகளில் சபையால் உற்பத்தி செய்யப்பட்ட ரூபா 305,096 ஆன பெறுமதியுடைய சேதன பசளை விற்பனைக்காக பொதி செய்யப்படாமல் களஞ்சியப்படுத்தப்பட்டிருந்தது. | ஆணையாளரின் ஆலோசனையின் பேரில் தீர்வு செய்யப்படும் | சேதனப் பசளையை முறையாக பொதி செய்து விற்பனை செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஈ) | ஈச்சிலம்பற்று | 2021 ஆம் ஆண்டின் போது நிர்மாணிக்கப்பட்ட ரூபா 2,842,453 ஆன பெறுமதியுடைய அலுவலகங்கள் மூலதனம் ஆக்கப்பட்டிருக்கவில்லை | கட்டிட புனரமைப்பின் பெறுமதியை நடை முறை அல்லாத சொத்துக்களுக்கு உள்ளடக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | நிர்மாணிக்கப்பட்ட கட்டிடத்தின் பெறுமதியை நடைமுறை அல்லாத சொத்துக்களின் கீழ் கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (உ) | குச்சவெளி முன்னம்போடிவெட்டை புல்மோட்டை கோமரங்கடவெல | கமல சேவை செயற்குழுவிற்கு சொந்தமான கட்டிடங்கள் மற்றும் தளபாடங்கள் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை | எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படுவதாக | அதனை நடைமுறை அல்லா சொத்துக்கள் கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஊ) | குச்சவெளி | ரூபா 105,330 கூட்டுதொகையான சேதன பசளைகள் நிதிக் கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டு இருக்கவில்லை. | பெறுமதி தீர்மானிக்கப்பட்டு எதிர்காலத்தில் அதனை கணக்குகளில் வெளிப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | ஆரம்ப மற்றும் இறுதி இருப்பு முறையாக பெறுமதியிடப்பட்டு கணக்குகளில் வெளிப்படுத்தப்பட வேண்டும் |
| (எ) | குச்சவெளி புல்மோட்டை | CSIAP நன்கொடையாளர் அமைப்பிடமிருந்து நன்கொடையாக கமநல சேவை அபிவிருத்தி செயற்குழுக் களுக்காக கிடைத்த 4 பயிரிடல் இயந்திரம் மதிப்பீடு செய்யப்படா திருந்ததுடன் அவற்றின் பெறுமதியை கணக்குகளில் வெளிப்படுத்தியிருக்கவில்லை | பெறுமதி தீர்மானிக்கப்பட்டு எதிர்காலத்தில் அதனை கணக்குகளில் வெளிப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் | CSIAP இனால் வழங்கப்படுகின்ற இயந்திரங்களுக்கான பெறுமதி தீர்மானிக்கப்பட்டு அதனை கணக்குகளில் வெளிப்படுத்தப்பட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஏ) | குறிஞ்சாங்கேணி | ரூபா 22,041,100 கூட்டுத் தொகையான உரக் கொள்வனவு நிதிக் கூற்றுகளில் ரூபா 69,244,400 என காண்பிக்கப்பட்டிருந்தது. | 2023 ஜனவரி மற்றும் பெப்ரவரி மீதி ரூபா 47,703,300 மீள வழங்கப்பட்டிருந்தது | உர விற்பனை சரியாக வெளிப்படுத்தப்பட வேண்டும். |
| (ஐ) | குறிஞ்சாங்கேணி | ரூபா 668,000 மொத்த பெறுமதியான வான் அல கமநல சேவை நிலையத்தினால் வழங்கப்பட்ட 3340 கிலோ கிராம் | குறித்த உர இருப்பு விவசாயிகளுக்கு நேரடியாக பகிர்ந்து அளிக்கப்பட்டது. | இருப்புப் பெறுமதிக்கு உள்ளடக்குவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும் |

| | | | | |
|---|---|---|---|---|
| | | யூரியா உரம் மீளாய்வாண்டின் நிதிக் கூற்றுகளில் கணக்கீடு செய்யப்பட்டு இருக்கவில்லை | | |
| (ஒ) | முள்ளிபொத்தானை ஈச்சிலம்பற்று கிளிவெட்டி முன்னம்போடிவெட்டை தம்பலகாமம் | கமநல சேவைகள் திணைக்களத்தினால் நன்கொடையாக வழங்கப்பட்ட ரூபா 2,724,500 ஆன 05 சட்டர் இயந்திரங்களுக்காக கணக்கு வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை | நிதிக் கூற்றுகளில் இத்தவறை சீராக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் | இச்சொத்துக்களை நடைமுறை அல்லா சொத்துக்களாக நிதி நிலைமைகூற்றில் உள்ளடக்கப்பட வேண்டும் |
| (ஓ) | சேருவில | இலங்கை விவசாய இரசாயன உர விற்பனை நிலையத்திலிருந்து கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 707,157 பெறுமதியான இரசாயன உரம் மீளாய்வண்டில் நிதிக் கூற்றுகளில் காண்பிக்கப்பட்டு இருக்கவில்லை. | இருப்பு பதிவேட்டில் உள்ளடக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | இரசாயன உரங்களின் பெறுமதி நிதிக் கூற்றுகளில் காண்பிக்கப்பட வேண்டும் |
| (ஔ) | தம்பலகாமம் | ரூபா 2,756,474,000 காசுக்கு விற்பனை செய்யப்பட்ட யூரியா உரம் காசுப் காய்ச்சல் கூற்றில் ரூபா 55,129,480 என காண்பிக்கப்பட்டிருந்தது | பதிலளிக்கப்பட்டிருக்க வில்லை | வேறுபாட்டை இனங் கண்டு சீராக்குவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும் |
| (க) | தம்பலகாமம் | ரூபா 30,490,000 கூட்டுத் தொகையான யூரியா உரக் கொள்வனவு நிதிக் கூற்றுக்களில் ரூபா 3,031,000,000 என காண்பிக்கப்பட்டிருந்தது. | பதிலளிக்கப்பட்டிருக்க வில்லை | வேறுபாட்டை இனங் கண்டு சீராக்குவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (க) | உப்புவெளி | மீளாய்வாண்டில் ரூபா 1,565,365 கூட்டுத்தொகையான 03 மூலதன நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்பட்டன. எனினும் அவை மூலதனமாக்கப்பட்டிருக்கவில்லை | அத்தவறை சீராக்கி முறையான வகையில் உள்ளடக்க நடவடிக்கை எடுக்கப்படும். | இச்சொத்துக்களை நிதி அல்லாத சொத்துக்களில் உள்ளடக்கப்பட வேண்டும். |
| (க) | கோமரங்கடவெல | இருப்பு மெய்மையாய்வு அறிக்கை மற்றும் உர இருப்பு புத்தகங்களுக்கு இடையே 4,620 கிலோகிராம் யூரியா உரத்திற்குரிய ரூபா 924,000 ஆன வேறுபாடு அவதானிக்கப்பட்டது | கணக்கீட்டு ஆவணக் கோவைகள் அதிகாரம் பெற்ற உத்தியோகத்தரால் முறைமையில் செய்யப்படுவதுடன் மீதிகளை சீராக்குவதற்கு நடவடிக்கை எடுப்பதாக | வேறுபாட்டை கண்டுபிடித்து அதன் பிரகாரம் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும் |

### 1.3.2 கணக்காய்வுக்காக எழுத்து மூலமான சான்றுகள் இல்லாமை

| செயற்குழு / செயற்குழுக்கள் | விடயம் | தொகை (ரூபா) | வழங்கப்படாத கணக்காய்வு சாட்சிகள் | முகாமைத்துவத் தின் கருத்துரை | பரிந்துரைகள் |
|---|---|---|---|---|---|
| கிளிவெட்டி<br>கிண்ணியா<br>குச்சவெளி<br>முள்ளிபொத்தானை<br>குறிஞ்சாங்கேணி<br>மூதூர்<br>நிலாவெளி<br>சம்பூர்<br>சேருவில<br>தம்பலகாமம்<br>தோப்பூர்<br>உப்புவெளி<br>ஈச்சிலம்பற்று<br>கோமரங்கடவெல<br>முன்னம்போடிவெட்டை<br>புல்மோட்டை | பெற வேண்டியவை | 38,328,518 | கடன்பட்டோர் உறுதிப்படுத்தல்கள் உரிய திணைக்களங்களிடம் இருந்து உறுதிப்படுத்தல்கள் மற்றும் கடன்பட்டோர் பதிவேடு | உதவி ஆணையாளரிடமிருந்து அனுமதி கிடைத்த பின் உரிய நடவடிக்கை மேற்கொள்ளப் படும். | பதிவேடுகள் நாளாது வரையாக பேணிக் கொள்ள நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| கிளிவெட்டி<br>கிண்ணியா<br>குச்சவெளி<br>முள்ளிபொத்தானை<br>குறிஞ்சாங்கேணி<br>மூதூர்<br>நிலாவெளி<br>சம்பூர்<br>சேருவில<br>தம்பலகாமம்<br>தோப்பூர்<br>உப்புவெளி<br>ஈச்சிலம்பற்று<br>கோமரங்கடவெல<br>முன்னம்பொடிவெட்டை<br>புல்மோட்டை | செலுத்த வேண்டியவை | 56,047,084 | கடன்கொடுத்தோர் உறுதிப்படுத்தல்கள் உரிய திணைக்களங்களிடம் இருந்து உறுதிப்படுத்தல்கள் மற்றும் கடன்கொடுத்தோர் பதிவேடு | உதவி ஆணையாளரிடமிருந்து அனுமதி கிடைத்த பின் உரிய நடவடிக்கை மேற்கொள்ளப் படும். | நாளாது வரையாக்கப் பட்ட கடன் கொடுத்தோர் மீதிகளை உறுதிப்படுத்தும் கடிதங்களை பெற்றுக் கொள்ளல் பதிவேடுகள் பேணுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**1.4 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் ஆகியவற்றுடன் இணங்காமை.**

| செயற்குழு / செயற்குழுக்கள் | சட்டங்கள் விதிகள் பிரமாணங்கள் போன்றவற்றுடனான தொடர்பு | இணக்கமின்மை | முகாமைத் துவத்தின் கருத்துரை | பரிந்துரைகள் |
|---|---|---|---|---|
| **2000 இன் 46 ஆம் இலக்க கமநல அபிவிருத்திச் சட்டம்** | | | | |
| கிளிவெட்டி<br>கிண்ணியா<br>குச்சவெளி<br>முள்ளிபொத்தானை<br>குறிஞ்சாங்கேணி<br>மூதூர்<br>நிலாவெளி<br>சம்பூர்<br>சேருவில<br>தம்பலகாமம்<br>தோப்பூர்<br>உப்புவெளி<br>ஈச்சிலம்பற்று<br>முன்னம்பொடிவெட்டை<br>புல்மோட்டை | 43 (9) பிரிவு | இரண்டு வருடங்களுக்கு மேல் பொதுக்கூட்டத்தை கூட்டுவதற்கு செயற்குழுவினால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நடப்பு ஆண்டில் விவசாய சம்மேளனங்களின் வருடாந்த பொதுக் கூட்டத்தை நடத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ள. | பொதுக் கூட்டத்தை கூட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

**2. நிதி மீளாய்வு**

(அ) மீளாய்வாண்டின் 22 கமநல சேவை செயற்குழுக்களின் செயற்பாட்டு விளைவுகள் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 1,262,775 ஆக இருந்ததுடன் அதனோடொத்த முன்னைய ஆண்டின் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 28,828,016 ஆகும். இதற்கமைய நிதிசார் செயலாற்றல் ரூபா 27,565,241 ஆல் குறைவடைந்திருந்தது. செயற்குழுக்களின் செயற்பாட்டு வருமானங்கள் குறைந்தமையே பிரதானமான காரணமாக இருக்கின்றது.

(ஆ) சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களின் பிரகாரம், மீளாய்வாண்டினுள் செலவினத்தை மிகைத்த வருமானமொன்றுடன் 22 கமநல அபிவிருத்தி வங்கிகளின் செயற்பாட்டு விளைவுகள் ரூபா 1,295,068 ஆக இருந்தது. அதனோடொத்த முன்னைய ஆண்டின் செலவினத்தை மிகைத்த வருமானம் ரூபா 1,117,975 ஆகும். அதன் பிரகாரம் நிதிச் செயலாற்றல் ரூபா 177,095 ஆல் அதிகரித்திருந்தது.

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 நிதி முகாமைத்துவம்**

| செயற்குழு / செயற்குழுக்கள் | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| மூதூர்<br>முள்ளிபொத்தானை<br>புல்மோட்டை<br>முன்னம்பொடிவெட்டை | மீளாய்வாண்டின் இறுதியில் செயற்குழுவால் ரூபா 7,567,959 கூட்டுத் தொகையான சேமிப்பு மற்றும் நடைமுறை கணக்குகளில் வைப்புச் | நிலையான வைப்புக்களில் முதலீடு செய்வதற்கு நடவடிக்கை | செயற் குழுவின் மிகை பணத்தை |

| | | | |
|---|---|---|---|
| உப்புவெளி | செய்யப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் இத்தொகையை நிலையான வைப்புக்களில் முதலீடு செய்து வருமானமொன்று உழைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | எடுக்கப்படும் | முறையாக முதலீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

**3.2 முகாமைத்துவ வினைதிறனின்மை**

| | செயற்குழு / செயற்குழுக்கள் | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரைகள் |
|---|---|---|---|---|
| (அ) | கிண்ணியா குறிஞ்சாங்கேணி சேருவில | முன்னைய மற்றும் மீளாய்வாண்டில் வயல் காணி தொடர்பாக சபைக்கு கிடைத்த 1085 முறைப்பாட்டு விண்ணப்பங்கள் தொடர்பாக உரிய உத்தியோகத்தரால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. முறைப்பாட்டு விண்ணப்பங்கள் தற்போது விசாரணை செய்யப்பட்டு வருகின்றது. | பரிசோதனைகளை பூர்த்தி செய்வதற்கு திட்டம் தயாரிக்கப்படுகின்றது. | முறைப்பாட்டு விண்ணப்பங்கள் தொடர்பாக உரிய நேரத்தில் பரிசோதனையை நடாத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | முன்னம்போடிவெட்டை | ரூபா 279,358 செலவிடப்பட்டு கமநல அபிவிருத்திச் சபையால் 2016 ஆம் ஆண்டில் செயற்படுத்தப்பட்ட மாதிரி விவசாய பூங்கா செயற்திட்டம் 6 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக பயன்பாட்டிற்கு எடுக்க முடியாத நிலைமையொன்றில் காணப்பட்டது. அதன் காரணமாக இந்த செயற்திட்டத்திற்காக செலவிடப்பட்ட பணம் விளைவற்று காணப்பட்டது. | நீண்டகால முதலீட்டின் பௌதீக இணக்கப்பாடு உறுதிப்படுத்தப்பட்டு அதிக வருமானமொன்று உழைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | நீண்டகால முதலீட்டில் பௌதீக இணக்கப்பாடு உறுதிப்படுத்தப்பட்டு அதன் மூலம் வருமானமொன்றை உழைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (இ) | உப்புவெளி | கமநல அபிவிருத்தி செயற்குழுவின் நிர்வாக அதிகாரம் பிரதேசத்தில் 4,217.5 ஏக்கர் அளவிலான உயர் நிலம் உயர்காணி இடாப்பில் பதிவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. | இவ்வாண்டு முடிவடையும் போது உயர் காணியை பதிவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப் படுவதுடன் நாளது வரையான தகவல் உறுதிப் படுத்தப்பட்டதுடன் உரிய நடைமுறை பயன்படுத்தப்பட்டு ஏக்கர் வரி அறவிடப்பட உள்ளது. | ஏக்கர் வரி பதிவேடு அல்லது வழியில் தரவு முறைமையில் உள்ளடக்கு வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஈ) | தம்பலகாமம் | நிதிக் கூற்றுக்களில் கட்டிக் காண்பிக்கப்பட்டுள்ள ரூபா 2,993,817 பெறுமதியான ஆதனங்கள்,பொறிகள் மற்றும் உபகரணங்கள் தொடர்பில் அட்டவணை கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை. | பதில் அளிக்கப்படவில்லை. | ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள் என்பன நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்கப்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (உ) | கோமரங்கடவெல | விவசாயம் சார்ந்த தகவல்களை விவசாயிகளுக்கு பகிர்ந்தளிப்பதற்காக ஒன்றினைந்த முகாமைத்துவ செயற்திட்டத்தின் கீழ் ரூபா 272,524 பெறுமதியான தொலைக்காட்சியொன்று வழங்கப்பட்டிருந்தது. எனினும் அதனை எதிர்பார்க்கப்பட்ட செயற்பாடுகளுக்காக பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | பொருத்தமான நடவடிக்கை எடுக்கப்படுவதுடன் அதன் பின்னர் காண்பிக்க நடவடிக்கை எடுக்கப்படும். | தொலைக்காட்சியை எதிர்பார்த்த செயற்பாட்டிற்காக பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஊ) | கோமரங்கடவெல | முன்னைய ஆண்டில் விவசாயிகளுக்கு காசுக்கு விற்பனை செய்வதற்காக தேசிய உர கம்பனியிடமிருந்து 50 கிலோகிராம் பாரமுள்ள ரூபா. 5,450,000 பெறுமதியுடைய 545 TSP உர பொதிகள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன. எனினும் அவை களஞ்சியத்தில் விளைவற்று காணப்பட்டன. | 2023 பெரும் போகத்தின் போது அவற்றை விற்பனை செய்ய நடவடிக்கை எடுப்பதாக | விவசாயிகளுக்கு வழங்குவதற்கோ அல்லது மீண்டும் உர கம்பனிக்கு வழங்குவதற்கோ நடவடிக்கை எடுத்தல் வேண்டும |
| (எ) | கோமரங்கடவெல | மீளாய்வாண்டில் ரூபா 162,000 பெறுமதியான 90 உரப் பொதிகள் ஷசிகா லங்கா தனியார் கம்பனியிடமிருந்து கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. எனினும் இவை விற்பனை செய்யப்படாமல் இருந்ததுடன் சேதமடைந்து காணப்பட்டன. | இந்த உருப்படியை அகற்றுவதற்கு அனுமதி கோரி உதவி ஆணையாளருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. | செயற்குழுவிற்கு ஏற்பட்ட நட்டத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும் |
| (ஏ) | கோமரங்கடவெல | கமநல அபிவிருத்தி செயற்குழுவின் மொத்த வருமானம் மற்றும் செலவினம் முறையே ரூபா 36,803,656 மற்றும் ரூபா 37,400,709 ஆக இருந்தது. எனினும் வருமான செலவினக் கட்டுப்பாட்டு பதிவேடு கமநல அபிவிருத்தி சபையால் பேணிச் செல்லப்பட்டிருக்கவில்லை. | பதிவேடுகளை முறையாக பேணிச் செல்லுமாறு உரிய உத்தியோகத்தருக்கு ஆலோசனை வழங்கப்பட்டிருந்தது. | வருமானம் மற்றும் செலவின கட்டுப்பாடு பதிவேடு பேணிச் செய்யப்பட வேண்டும். |

## 3.3 செயற்பாட்டு வினைத்திறனின்மை

| | செயற்குழு / செயற்குழுக்கள் | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரைகள் |
|---|---|---|---|---|
| (அ) | தம்பலகாமம் ஈச்சிலம்பற்று | 2020 மற்றும் 2021 ஆம் ஆண்டுகளில் கமநல சேவை அபிவிருத்தி செயற்குழுவிற்கு 2370 லீற்றர் திரவ பசளை கிடைத்திருந்தது. எனினும் அவை விற்பனை செய்யப்படாமையால் | பதிலளிக்கப்பட வில்லை. | களஞ்சியத்திலுள்ள இருப்புக்களை விற்பதற்கோ அல்லது வழங்குவதற்கு மீண்டும் வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும் |

| | | | | |
|---|---|---|---|---|
| | | களஞ்சியங்களில் விளைவற்றுக் காணப்பட்டன. | | |
| (ஆ) | தம்பலகாமம் | கமநல அபிவிருத்தி செயற்குழுவினால் காணிக்கான உரித்துப் பதிவேடுகள் உறுதிப்படுத்தாமல் 807 ஏக்கர் வயல்கள் வயல் காணி இடாப்பில் பதிவு செய்யப்பட்டிருந்தது. | பதிலளிக்கப்பட வில்லை. | காணி தொடர்பான ஆவணங்களை உறுதிப்படுத்தியதன் பின்னர் வயல் காணிகளை பதிவு செய்வதற்கு நடவடிக்கை வேண்டும். |
| (இ) | கோமரங்கடவெல | 2018 ஆம் ஆண்டின் போது விவசாய அமைச்சின் மூலம் ரூபா 616,627 ஆன கடன்தொகையின் கீழ் 500 மில்லி லீற்றர் முதல் 1 லீற்றர் வரையான 1051 திரவ பசளை பகிர்ந்தளிக்கப்பட்டிருந்தன. எனினும் அவை விற்பனை செய்யப்படாதிருந்ததுடன் காலாவதியாகி களஞ்சியத்தில் காணப்பட்டன | இந்த உருப்படியை அகற்றுவதற்கு அங்கீகாரம் கோரி உதவி ஆணையாளருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது . | இந்த காலாவதியான உரத்தை களஞ்சியத்திலிருந்து அகற்றுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 3.4 விளைவற்ற / குறைவாகப் பயன்படுத்திய ஆதனங்கள், ஆலை மற்றும் உபகரணங்கள்

| | செயற்குழு / செயற்குழுக்கள் | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரைகள் |
|---|---|---|---|---|
| (அ) | குச்சவெளி<br>முள்ளிபொத்தானை<br>முன்னம்போடிவெட்டை<br>உப்புவெளி<br>தம்பலகாமம்<br>புல்மோட்டை<br>கிளிவெட்டி<br>கிண்ணியா<br>சேருவில<br>குறிஞ்சாங்கேணி | சேதனப் பசளை உற்பத்தியை அதிகரிப்பதற்கும் தாவர நோய்களை கட்டுப்படுத்துவதை குறைப்பதற்குமான கிழக்கு மாகாண விவசாய பணிப்பாளரால் 145 மின்சார தெளிப்பான் இயந்திரங்கள் வழங்கப்பட்டிருந்தன. எனினும் அவை எதிர்பார்க்கப்பட்ட நோக்கங்களுக்காக பயன்படுத்த எந்தவொரு நடவடிக்கையும் எடுக்கப்பட்டு இருக்கவில்லை. | 2023 ஆம் ஆண்டின் போது மின்சார தெளிப்பான் இயந்திரங்களை பயன்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும். | மின்சார தெளிப்பான் இயந்திரங்களை எதிர்பார்க்கப்பட்ட நோக்கங்களுக்காக பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | கிண்ணியா<br>குச்சவெளி<br>முன்னம்போடிவெட்டை<br>சேருவில<br>உப்புவெளி | 05 உழவு இயந்திரங்களை திருத்தம் செய்து மீண்டும் பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. அதனால் அந்த உழவு இயந்திரங்களில் இருந்து வாடகை வருமானம் இழக்கப்பட்டிருந்தது. | இவை பயன்படுத்துவதற்கு முடியாத நிலையில் காணப்படுவதுடன் எதிர் வரும் நடவடிக்கைகளுக்காக அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக | அவற்றை விற்பனை செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும் |
| (இ) | கிண்ணியா<br>சேருவில<br>குறிஞ்சாங்கேணி | கமநல அபிவிருத்தி செயற் குழுவில் 06 வேன் டயர்கள் மற்றும் 09 புல் வெட்டும் | அந்த இயந்திரங்களை திருத்தம் செய்து விவசாயிகளுக்கு | இயந்திர உபகரணங்களை பயன்படுத்துவதற்கு |

| | | | | |
|---|---|---|---|---|
| | | இயந்திரங்கள் என்பவற்றை திருத்தம் செய்து மீண்டும் பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை | வாடகைக்கு வழங்குவதால் வருமானத்தை உழைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஈ) | மூதூர்<br>புல்மோட்டை<br>சாம்பல்தீவு<br>தம்பலகாமம்<br>ஈச்சிலம்பற்று | முன்னைய மற்றும் மீளாவாண்டின் போது கமநல அபிவருத்தி செயற்குழுவிற்கு 21,982 லீட்டர் திரவ உரம் நன்கொடையாக கிடைத்திருந்தது. எனினும் அவற்றை விற்பனை செய்வதற்கோ அல்லது பயன்படுத்தாமல் வைக்கப்பட்டிருந்ததுடன் ஓர் ஆண்டுக்கு மேற்பட்ட காலமாக விளைவற்ற வகையில் களஞ்சியப்படுத்தப்பட்டு இருந்தது. | எதிர்காலத்தில் இதனை சீராக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் | விற்பனை செய்வதற்கு அல்லது பொருத்தமான நடவடிக்கைகளை எடுத்தல் வேண்டும் |

## 3.5 மனிதவள முகாமைத்துவம்

| **செயற்குழு / செயற்குழுக்கள்** | **கணக்காய்வு அவதானிப்பு** | **முகாமைத்துவத்தின் கருத்துரை** | **பரிந்துரைகள்** |
|---|---|---|---|
| கிளிவெட்டி<br>கிண்ணியா<br>குச்சவெளி<br>முள்ளிபொத்தானை<br>குறிஞ்சாங்கேணி<br>மூதூர்<br>நிலாவெளி<br>சம்பூர்<br>சேருவில<br>தம்பலகாமம்<br>தோப்பூர்<br>உப்புவெளி<br>ஈச்சிலம்பற்று<br>கோமரங்கடவெல<br>முன்னம்போடிவெட்டை<br>புல்மோட்டை<br>அக்போபுர<br>கந்தளாய்<br>வான்எல<br>பதவிசிறிபுர<br>பன்குளம் | 46 அபிவிருத்தி உத்தியோகத்தரகள் மிகையாக காணப்படுவதுடன் 15 கமநல அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், 81 விவசாய ஆராச்சி உற்பத்தி உதவியாளர்கள், 02 காவலாளர்கள், மற்றும் 03 அலுவலக உதவியாளர்கள் வெற்றிடமும் காணப்பட்டது. | மனித வளங்கள் தொடர்பான விபரங்கள் மாவட்ட உதவி ஆணையாளருக்கு வழங்கப்பட்டுள்ளது. | இவ் மனிதவள மிகைகள் மற்றும் பற்றாக்குறைகள் சீர்செய்யப்பட வேண்டும். |

**04.** **கமநல வங்கி**

| | செயற்குழு / செயற்குழுக்கள் | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரைகள் |
|---|---|---|---|---|
| (அ) | முள்ளிபொத்தானை<br>குறிஞ்சாங்கேணி<br>சம்பூர்<br>சேருவில<br>தம்பலகாமம்<br>கோமரங்கடவெல<br>புல்மோட்டை | முன்னைய மற்றும் மீளாய்வாண்டு காலப்பகுதியில் 237 விவசாயிகளுக்கு விவசாயக் கடன்கள் வழங்கப்பட்டிருந்தன. கடன்களுக்கான ஒப்பந்த காலம் முடிவடைந்த நிலையில் கடன் தொகையுடன் கூடிய வட்டி உள்ளடங்கலாக மொத்தம் ரூபா 8,589,167 தொகை அறவிடுவதற்கு எஞ்சியுள்ளது. எனினும், இத் தொகையினை அறவீடு செய்வதற்காக எந்தவொரு சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்க வில்லை. | விவசாயிகளின் கடன் மீதிகளுக்காக நியாய சபை மூலம் ஆலோசணைகளைப் பெற்று மீதிகளை அறவிடுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும். | எஞ்சிய கடன் மற்றும் வட்டியை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும் |
| (ஆ) | கோமரங்கடவெல | மீளாய்வாண்டில் 94 விவசாயிகளுக்கு விவசாயக் கடன்கள் வழங்கப்பட்டிருந்தன. இக் கடன்களை வழங்கும் போது தொடர்புடைய 06 ஆவணங்கள் பெற்றுக்கொள்ளப்படாமல் மற்றும் கடன் விண்ணப்பப்படிவங்கள் முறையாக கோவை செய்யப்படாமல் கடன்கள் வழங்கப்பட்டிருந்தன. | குமநல வங்கிகளின் உத்தியோகத்தருக்கு கணக்கீடு பற்றிய போதிய அறிவின்மை விளைவாக ஆவணங்கள் முறையாக பூரணப் படுத்தப்பட்டிருக்கவில் லை கமநல அபிவிருத்தி தொடர்பான முழுமையான மேற்பார்வையின் கீழ் பிரிவுக்கு பொறுப்பான உத்தியோகத்தர்களால் அனுமதி அளிக்கப்பட்டதன் பின்னர் கடன்கள் வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும். | அனைத்து ஆவணங்களுடன் கடன்களை வழங்குவதற்காக அனைதது சட்ட தேவைப்படுகளை யும் பூர்த்தி செய்யப்படுதல் வேண்டும். |
| (இ) | கோமரங்கடவெல | முன்னைய ஆண்டு மற்றும் மீளாய்வாண்டிற்காக கமநல வங்கிகளின் செயற்பாடுகள் மற்றும் கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பாக பதிவு செய்யப்பட்டு பேணப்படவேண்டிய கடன் பதிவேடு, சேமிப்பு உப பதிவேடு, சிறுகுழு சேமிப்பு உப பதிவேடு, கட்டாய சேமிப்பு உப பதிவேடு, பங்கு உப பேரேடு மற்றும் சேமிப்பு உப பேரேடு போன்றவற்றை பேணிச் செல்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | 2023 ஆம் ஆண்டில் குறித்த உத்தியோகத்தர் களுக்கு போதிய பயிற்சிகளை இதனை சரிசெய்ய நடவடிக்கை எடுக்கப்படும். | கமநல வங்கி தொடர்பான பதிவேடுகளை முறையாக பேணப்படுதல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (ஈ) | கிளிவெட்டி<br>கிண்ணியா<br>குச்சவெளி<br>முள்ளிபொத்தானை<br>குறிஞ்சாங்கேணி<br>மூதூர்<br>நிலாவெளி<br>சம்பூர்<br>உப்புவெளி<br>ஈச்சிலம்பற்று<br>கோமரங்கடவெல<br>முன்னம்போடிவெட்டை<br>புல்மோட்டை | 2020 ஒக்தோபர் 08 ஆந் திகதிய 09/2020 ஆம் இலக்க மற்றும் 2012 பெப்ரவரி 29 ஆந் திகதிய 4/2012 ஆம் இலக்க நிதிக் கட்டுப்பாடு மற்றும் அறிக்கையிடல் தொடர்பான கமநல வங்கி முகாமைத்துவம், தொடர்பான கமநல அபிவிருத்தி திணைக்களத்தின் சுற்றறிக்கையின் பிரகாரம் வங்கி தமது செயற்பாட்டினை மேம்படுத்தும் பொருட்டு பங்குதாரர்கள் மற்றும் வைப்பாளர்கள் எண்ணிக்கை அதிகரிக்கப்படுதல் வேண்டும். இருப்பினும் மீளாய்வாண்டின் காலப்பகுதியில் கமநல வங்கியினால் பங்குதாரர்கள் மற்றும் வைப்பாளர்களை இணைத்துக் கொள்வதற்கான எந்தவொரு நடவடிக்கை மேற் கொள்ளப்பட்டிருக்கவில்லை. | இனிவரும் காலங்களில் கமநல வங்கியில் பங்காளர்கள் மற்றும் சேமிப்பாளர்கள் பங்குபற்றலை அதிகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | கமநல வங்கியின் செயற்பாடடை மேம்படுத்து வதற்காக சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (உ) | கிளிவெட்டி<br>கிண்ணியா<br>குச்சவெளி<br>முள்ளிபொத்தானை<br>குறிஞ்சாங்கேணி<br>மூதூர்<br>நிலாவெளி<br>சம்பூர்<br>சேருவில<br>தம்பலகாமம்<br>தோப்பூர்<br>உப்புவெளி<br>ஈச்சிலம்பற்று<br>கோமரங்கடவெல<br>முன்னம்போடிவெட்டை<br>புல்மோட்டை | மேற்படி சுற்றறிக்கை 2.6.3 ஆம் பிரிவின் பிரகாரம், சகல பதிவு செய்யப்பட்ட கமநல அபிவிருத்தி சங்கத்தினால் சேமிப்பு கணக்கு ஆரம்பித்தல் மற்றும் அக்கணக்கின் ஊடாக அனைத்து கொடுக்கல் வாங்கல்களும் இடம்பெறுதல் வேண்டுமென குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. | இனி வரும் காலங்களில் அனைத்து கொடுக்கல் வாங்கல்களையும் கமநல வங்கிக் கணக்கின் ஊடாக மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும் | சுற்றறிக்கையின் பிரகாரம் சேமிப்பு கணக்கு ஆரம்பிக்கப்பட்டு அதன் நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். |